**தேசிய லொத்தர் சபை - 2024**

-----------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய லொத்தர் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து சபையின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை காட்டும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் சபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

**1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | கணக்காய்வு அபிப்பிராயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 40 இன் 30 ஆம் பந்திக்கு முரணாக முப்பது ஆண்டுகள் (30) குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுராதபுரத்திலுள்ள மற்றும் மன்னாரிலுள்ள இரண்டு காணிகளில் நிர்ணயிக்கப்பட்ட இரண்டு சுற்றுலா விடுதிகள் கடந்த ஆண்டில் நியாயமான மாதிரியின் படி அளவீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கிரய மாதிரிக்கு இணங்க அடையாளங்காணப்பட்டு ரூபா 2,485,500 ஆல் காலக்கழிவு தேய்வு செய்யப்பட்டிருந்தது.அதற்கிணங்க சபையினால் கணக்கீட்டு கொள்கை தொடர்ச்சியாக | முதலீட்டு ஆவணங்கள் சம்பந்தமாக நிறுவனத்திற்கு மிகவும் வினைத்திறனான மற்றும் நடைமுறைச் சாத்தியமான அளவீட்டு மாதிரியானது கிரய மாதிரி என்பதனால் அடுத்துவரும் கணக்காண்டிலிருந்து அதற்காக கிரய மாதிரியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீட்டு நியமங்களை சரியான முறைமையில் தொடர்புபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கணக்கீட்டு கொள்கையில் மேற்கொள்ளப்பட்டிருந்த அந்த மாற்றம் நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் கீழும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சபையினால் 04 தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள்/ பெண் அறிவிப்பாளர்களின் சேவையை முடிவுறுத்தியமை சம்பந்தமாக தொழில் இணக்க சபையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற 04 வழக்குகள் மற்றும் சபையின் ஒருஊழியர் கட்டாய ஓய்வுபெறுதலின் அடிப்படையில் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சபையினால் உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த ஒரு வழக்கு சம்பந்தமான இறுதித் தீர்ப்பு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 04 தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள்/ பெண் அறிவிப்பாளர்களின் சேவையை முடிவுறுத்தியமை இணக்க சபையினால் விசாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் தேசிய லொத்தர் சபையின் ஒரு சாரதி கட்டாய ஓய்வு பெற்றமையின் காரணமாக அவரினால் தொழில் இணக்க சபையில் தொடுக்கப்பட்டிருந்த ஒரு வழக்கு சம்பந்தமாக ரூபா 1,279,437 தொகையினை தொழில் இணக்க சபையில் வைப்புச் செய்யுமாறு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த மேன்முறையீட்டு வழக்கு தற்பொழுது உச்ச நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் உரிய தகவல்களை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | சைபையினால் மீளாய்வாண்டில் லொத்தர் பரிசு கொடுப்பனவுகளை கணக்கீடு செய்யும்போது 05 லொத்தர் வகைகள் தொடர்பாக விசேட இலக்கத்தின் கீழான பரிசு கொடுப்பனவுகள் ரூபா 199,381,719 தொகை சபையின் வழக்கமான பரிசு செலுத்தும் முறைமையின் கீழ் கணக்கீடு செய்யப்படாது முன்னைய | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீட்டிழுப்பு செய்யப்படுகின்ற07 லொத்தர்கள் தொடர்பான பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள மீதிகளின் வித்தியாசம் அநத அந்த லொத்தர்கள் தொடர்பான பரிசு செலவுக் கணக்கில் சரியாக செம்மையாக்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டு தொடர்பாக விசேட இலகதத்தின் கீழான பரிசுக் கொடுப்பனவுகளையும் வழக்கமான பரிசுக் கொடுப்பனவு முறைமையின் கீழ் மேற்கொள்வதற்காக தேவையான ஏற்பாடுகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கான பரிசு ஒதுக்கத்தினைப் பயன்படுத்தி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எனவே 2024 ஆம் ஆண்டிற்கான இலாபம் சரியானது என சுட்டிக் காட்டுகிறேன். | வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 4(16) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 35 ஆம்இலக்க திருத்திய அதிகாரசட்டத்தின் 4(4) மற்றும் 4(5) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2024 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து யூன் 30 ஆந் திகதி வரை நடாத்தப்பட்ட 05 லொத்தர் வகைகளின் 06 மாதங்களை மிகைத்து உரிமை கோரப்படாத விசேட பணப் பரிசு 76,501,720 தொகை திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்காததுடன் அது செலுத்த வேண்டிய ஒரு பொறுப்பாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த விசேட நுகர்வோர் மேம்பாட்டு பரிசுப் பணம் அரசுடமையாக்கப்படாததுடன் அப்பரிசுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை உரிய பரிசு ஒதுக்க நிதியத்திலேயே வைக்கப்பட்டுள்ளதுடன் பரிசுக்காரர்கள் முன்வராத பொருள் பரிசினை மீண்டும் அடுததுவரும் விசேட பரிசாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனவே அப்பணம் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பணமாக பதிவு செய்யப்படுவதில்லை. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுககு இணங்க 06 மாதங்களை மிகைத்து உரிமை கோரப்படாத அனைத்து பணப் பரிசுகளும் திரண்ட நிதியத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2024 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரை லொத்தர் சந்தைப்படுத்தல் முகவர்களினால் மக்கள் வங்கியின் சேகரிப்பு கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 37,584,371 தொகை மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுக்கு கணக்கீடு செய்யப்படாது திசெம்பர் 31 ஆந் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி கணக்கிணக்க கூற்றில் அடையாளங்காணப்படாத ஒரு செலவு மீதியாக காட்டப்பட்டிருந்தது. | மக்கள் வங்கியின் சேகரித்தல் கணக்கிற்கு சந்தைப்படுத்தல் முகவர்களினால் வைப்புச் செய்யப்பட்டு 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் உரிய விலைப்பட்டியல்கள் வழங்கப்படாத பெறுமதி ரூபா 37,584,370.93 ஆனதுடன் இது வங்கி கணக்கிணக்க கூற்றில் தெளிவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்பணத்தில் மாவட்ட சந்தைப்படுத்தல் முகவர்களினால் வைப்புச் செய்யப்படுகின்ற பண வைப்புக்கள் உள்ளடக்கப்படுகின்றன. | சந்தைப்படுத்தல் முகவர்களினால் சபையின் வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்யப்படுகின்ற பணத்தை துரிதமாக சபையின் உரிய கணக்கிந்கு செம்மையாக்குதல் வேண்டும். |
| (ஈ) | சபையின் Fortune கணனி முறைமையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நாளாந்த லொத்தர் விற்பனை | இப்பெறுபேறுக்கு காரணமாக இருந்ததானது Fourtune கணனி முறைமையின் மென்பொருளில் காணப்பட்ட | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க வருமானத்தை சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | வருமானங்களை அறிக்கையுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட லொத்தர் விற்பனை வருமானங்களில் ரூபா 119,600 குறைவு அவதானிக்கப்பட்டது. | சில குறைபாடுகளாகும். எனினும் இக்குறைபாடானது இந்த மென்பொருளின் மூலக் குறியீடானது தேசிய லொத்தர் சபையிடம் இல்லாமையும் சேவை வழங்கும் நிறுவனம் 2015 ஆம் ஆண்டிலிருந்து சேவை வழங்குவதிலிருந்து நீங்கிக் கொண்டமையும் காரணமாக இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது. | செய்தல் வேண்டும். |
| (உ) | சபையின் இரண்டு ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,518,203 கடன் மீதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய நானாவித வருமானங்களாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | இப்பணத்தை எதிர்காலத்தில் கிடைக்க வேண்டிய ஊழியர் கடனாக காட்டுவதற்கு குறித்துக்கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்களின் மூலம் கணக்கீட்டுத் தகவல்களை சரியாக வகைப்படுத்தி வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு இணங்க சபையின் பெயரில் அத்திணைக்களத்தில் பதிவுசெய்திருந்த 06 மோட்டார் வாகனங்கள் காமாணமல் போயிருந்ததுடன் அந்த மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் சபையில் ஆவணப்படுத்தபடவில்லை | இந்த மோட்டார் வாகனங்கள் 20 ஆண்டுகள் பழமையானதுடன் அந்த மோட்டார் வாகனங்கள் தொடர்பான ஆவணங்கள் தற்பொழுது தேசிய லொத்தர் சபையிடம் இல்லை. இதன் காரணமாக இவ்விடயம் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்திடம் விசாரிக்கப்பட்டதுடன் அவர்களினால் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு இணங்க மேற்கூறிய வாககங்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு முன்வந்த சந்தர்ப்பங்களின் போது அல்லது அந்த | சபையின் பெயரில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் இந்த வாகனங்களின் பதிவு காணப்படுவதனால் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு செயல் முன்னேற்றத்தினை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிக்கையிடுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்வந்த சந்தர்ப்பங்களின் போது சபையிடம் விசாரிக்குமாறு வேண்டி மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 41 மாவட்ட சந்தைப்படுத்தல் முகவர்களிடமிருந்து வங்கிப் பிணைகள் அல்லது ஏனைய போதியளவான பிணைகளைப் பெற்றுக்கொள்ளாது லொத்தர்கள் கடனுக்கு விற்கப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 58,036,119 தொகை அறவிட வேண்டியிருந்தது. | சபையினால் சீட்டிழுப்புக்கள் நடாத்தப்படுகின்ற லொத்தர்களுக்காக விசேட சீட்டிழுப்புக்கள் நடாத்தப்படுவதுடன் அதன் போது வங்கிப் பிணைகளின் அடிப்படையில் மாத்திரம் அன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் லொத்தர் கடன்கள் வழங்கப்படும். அவ்வாறு விசேட சீட்டிழுப்புக்களுக்காக 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட கடன் மீதி ரூபா 58,036,119 ஆக இருந்ததுடன் 2025-04-30 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 7,601,715.00 ஆகும். | லொத்தர்ளை கடனுக்கு விற்பனை செய்கின்ற சந்தைப்படுத்தல் முகவர்களிடமிருந்து உள்ளடக்கும் வகையில் கடனுக்கு வழங்குகின்ற உச்ச எல்லையினை பர்துகாப்பு பிணைகள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஆளணியிலுள்ள 04 சந்தைப்படுத்தல் முகவர்கள் மற்றும் செயற்பாடற்ற 79 பெசிவ் லொத்தர் முகவர்களிடமிருந்து சபையினால் ரூபா 114,339,109 மீதி அறவிட வேண்டியதாக இருந்த போதிலும் மேற்கூறிய மீதிக்கான மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் கணக்காய்விறகுச் | ஒவ்வொரு ஆண்டின் இறுதித் திகதியிலும் காணப்படுகின்ற கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படத்தி அனுப்புவதற்காக நிதிப்பிரிவினால் பதிவுத் தபாலில் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் மின் அஞ்சல்கள் மூலம் வலய முகாமையாளர்களினுாடாகவும் இது தொடர்பாக மாவட்ட சந்தைப்படுத்தல் முகவர்களுக்கு | அனைத்து கடன்பட்டோர்களிடமிருந்து ம் மீதிகளின் உறுதிப்பத்தல் கடிதங்களை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. | தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மீதிகள் உறுதிப்படுத்தப்படவில்லையாயின் அம்மீதிகளை சரியான மீதிகளாக கருதி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களில் காட்டப்பட்டுள்ளதனால் அம்மீதிகள் சரியான மீதிகள் எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | சபையின் கணக்குகளின் பிரகாரம் 11 சந்தைப்படுத்தல் முகவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா 9,399,449 ஆக இருந்த போதிலும் மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் மீதி ரூபா 3,082,409 ஆக இருந்ததன் காரணமாக ரூபா 6,317,040 தொகையான வித்தியாசம் காணப்பட்டது. | 2024-12-31 இல் காணப்பட்ட கடன் மீதியினை உள்ளடக்கி மேற்கூறியவாறு சந்தைப்படுத்தல் முகவர்களுக்கு மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுவதுடன் மீதிகளை உறுதிப்படுத்துகின்ற திகதியளவில் கடன்கள் தீர்த்து வைக்கப்பட்டிருந்ததால் 2024-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு பல மீதிகள் உறுதிப்படுத்தி அனுப்பிவக்காமை மாவட்ட சந்தைப்படுத்தல் முகவர்களினால் மேற்கொள்ளப்படும். | வித்தியாசத்திற்கான காரணத்தை பரீட்சித்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்ட A-091 ஆம் இலக்க சந்தைப்படுத்தல் முகவர்களின் மீதியாக ரூபா 963,000 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் சபையின் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த மீதி ரூபா 596,292 ஆக இருந்ததன் காரணமாக ரூபா 366,708 வித்தியாசம் காணப்பட்டிருந்தது. | அதற்கிணங்க இந்த மாவட்ட சந்தைப்படுத்தல் முகவர்களினால் காணப்பட்ட கடன் மீதிகளை தீர்த்துவைத்தல் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மீதிகளை உறுதிப்படுத்தி அனுப்பவில்லையாயின் அம்மீதிகளை சரியான மீதிகளாக கருதி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதனால் அந்த மீதிகளை சரியான மீதிகளாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வங்கிப் பிணை அல்லது ஏனைய பிணைகள் இன்றி பெசிவ் லொத்தர்களை விற்பனை செய்தமைக்காக 41 லொத்தர் முகவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கியமையின் காரணமாக மேற்கூறிய முகவர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 9,597,376 மீதியினை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | 2024--12-31 ஆந் திகதியில் உள்ளவாறு 03 மாதங்களை மிகைத்த கடன் மீதி ரூபா 9,597,376 ஆனதுடன் இன்று வரை அறவிட வேண்டிய பணம் ரூபா 5,278,110 ஆகும். இக்கடன் மீதிக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சபை கடனுக்கு விற்பனை செய்கின்ற லொத்தர்களின் விற்பனை பெறுமதியை உள்ளடக்கும் வகையில் பாதுகாப்பு பிணை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் சபையினால் அறவிட வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | வங்கிப் பிணைகளை வழங்கியிருந்த செயற்பாடற்ற 30 லொத்தர் சந்தைப்படுத்தல் முகவர்களின் வங்கிப் பிணைகளின் பெறுமதியை மிகைத்து கடனுக்கு விற்பனை செய்திருந்ததன் காரணமாக பிணைப் பெறுமதியை மிகைத்து மேற்கொள்ளப்பட்ட ரூபா 21,131,129 விற்பனைப் பணத்தை சபையினால் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | வங்கிப் பிணைகளுக்கு மேலதிகமாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் விசேட சீட்டிழுப்புக்களுக்கான லொத்தர்கள் கடனுக்கு வழங்கப்படுவதுடன் அவ்வாறு வங்கிப் பிணைப் பெறுமதியை மிகைத்து வழங்கப்படுகின்ற கடன் தொகையில் ஒரு மீதியினைத் தவிர்த்து ஏனைய கடன் தொகைகள் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. அக்கடன்பட்டோரும் தவணைஅடிப்படையில் கொடுப்பனவு செய்து வருவதுடன் தற்போதைய கடன் தொகை ரூபா 1,773,408.55 ஆகும். | தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்ற கடனுக்கான விற்பனைப் பெறுமதியையும் பிணைப் பெறுமதியையும் மீளாய்வு செய்து தேவையான திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (எ) | சபையின் நலன்புரிச் சங்கத்திற்கு மற்றும் ஆளணியிலுள்ள ஒரு உத்தியோகத்தருக்கு கடன் அடிப்படையில் விற்பனை செய்திருந்த செவன, சமூர்த்தி மற்றும் விசேட லொத்தர்களை விற்பனை செய்தமை தொடர்பான ரூபா 1,086,759 தொகை 05 ஆண்டுகளை மிகைத்து நிலுவையாகக் காணப்பட்டதுடன் உரிய | தேசிய லொத்தர் சபையின் நலன்புரிச் சங்கத்திற்கும் ஒரு உத்தியோகத்தருக்கும் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 1,088,759.00 ஆகும். | லொத்தர்களை கொள்வனவு செய்கின்ற அனைத்து பாவனையாளர்களும் லொத்தர்களை கைக்காசிற்கு கொள்வனவு செய்வதனால் சபைக்கு கிடைக்க வேண்டிய பணத்தை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய உத்தியோகத்தருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்குத் தேவையான போதியளவான மற்றும் தேவையான போதிய மற்றும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எதிராக தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் போசுன் லொத்தர்கள் தொடர்பாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 964,678 தொகை மற்றும் கொழும்பு எயார்போர்ட் சுபர் ட்ரோ தொடர்பாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 4,150,280 தொகையை அறவீடு செய்வதற்காக உரிய விற்பனை முகவர்களுக்கு எதிராக போதியளவான மற்றும் பொருத்தமான நடவடிககை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொழும்பு எயார்போட் சுபர் ட்ரோ லொத்தர்கள் தொடர்பான நிலுவைப் பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக கோட்டை, நீதவான் நீதிமன்றத்தல் வழக்கு நடைபெற்று வருவதுடன் ஒரு சிவில் வழக்கினை தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. டொலர் போசுன் லொத்தர்களின் நிலுவையாகக் காணப்பட்ட பணம் சம்பந்தமாக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2024/03/11 ஆந் திகதிய குழு அறிக்கையினை சட்டரீதியான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக சிபாரிசுகளை வழங்குமாறு தெரிவித்து கடன்களை அறவீடு செய்யும் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக தாமதமின்றி சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | முறைப்படியாக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின்றி A-202 ஆம் இலக்க விற்பனை முகவருக்கு மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனைக்காக ரூபா 1,234,775 தொகை 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டதுடன் | இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2017 பெப்ரவரி 20 ஆந் திகதியிலிருந்து 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையான உடன்படிக்கையில் சபைக்காக மேலதிக பொது முகாமையாளரின் கையொப்பம் இடப்படவில்லை. சொனெல்டா ஹோல்டிங் தனியார் கம்பனி தொடர்பாக (A 202) காணப்பட்ட கடன் தொகைக்காக தற்பொழுது | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக தேவையான போதியளவான மற்றும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | சபையில் சேவையாற்றிய 05 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன் தொகையிலிருந்து மொத்தமாக ரூபா 713,393.54 தொகையான கடன் மீதி 2012,2019, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலிருந்து மீளச் செலுத்துதல் உரிய உத்தியோகத்தர்களால் அலட்சியப்படுத்தப்பட்டிருந் தும் அந்த அறவிட வேண்டிய கடன் மீதியை ஆண்டு இறுதி வரை அறவீடு செய்வதற்கு சபை தவறியிருந்தது. | இக்கடன் சம்பந்தமாக மீளாய்வு செய்து ஒரு அறிக்கையினை கடனை அறவீடு செய்யும் குழுவிற்கு அனுப்பிவைத்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டது. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்திற்கும் பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கும் இந்த விடயம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க இதில் குறிப்பிட்ட நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆரம்ப நடவடிக்கையாக பதிவுத் தபாலில் குற்றப் பத்திரிகை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இணக்க சபைக்கு அனுப்பிவைத்து தீர்த்து வைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | சபையில் சேவையாற்றிய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வீட்டுக் கடன் பணத்தில் மொத்தமாக ரூபா 1,518,204 ஆன கடன் மீதி நீண்ட காலமாக மீளச் செலுத்துதல் அலட்சியப்படுத்தப்பட்டிருந் தும் மேற்கூறிய கடன் தொகையை அறவீடு செய்வதற்கு அல்லது பிணைவைத்துள்ள ஆதனம் சம்பந்தமாகசட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் ரூபா 1,316.18 தொகையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போதைய மீதி ரூபா 1,518,204 ஆகும். | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக ஆதனப் பிணையின் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் முகாமைதுத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 10(5) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 35 ஆம் இலக்க நிதி (திருத்திய) அதிகாரச் சட்டத்தால் திருத்திய 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு | லொத்தர் வருமானத்திலிருந்து அதிகாரச்சட்டத்தில் உறுதியாக காட்டப்பட்டுள்ள செலவுகளைக் கழித்ததன் பின்னர் மிகுதியை திரண்ட நிதியத்திற்கு செலவுவைக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் நிறுத்திவைத்த ரூபா 4,040,535,807 மொத்த தொகையான இலாபம் அவ்வாறு திரண்ட நிதியத்திற்குச் செலவுவைக்கப்படாது சபையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | நிதி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட விசேட வேண்டுதலின் அடிப்படையில் ரூபா 410 மில்லியன் தொகையையும் 2023 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய இலாபமான ரூபா 650 மில்லியன் தொகையையும் சேர்த்து அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்கு ரூபா 1,060 மில்லியன் செலவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் 2024 ஆம் ஆண்டிற்கான இலாபம் அரசாங்கத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க எதிர்காலத்தில் திரண்ட நிதியத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 16(4) ஆம் பிரிவு மற்றும் 1997 இன் 35 ஆம் இலக்க திருத்திய அதிகாரச் சட்டத்தின் 4(4) ஆம் மற்றும் 5(4) | சபையினால் நடாத்தப்படுகின்ற அனைத்து தேசிய லொத்தர் சீட்டிழுப்புக்களிலும் அவ்வாறு சீட்டிழுப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலம் காலாவதியாகியதன் பின்னர் வழங்கப்படாத குறித்த பரிசினை | இந்த விசேட பாவனையாளர்களை மேம்படுத்துதல் பரிசினை அரசாங்கத்தின் திரண்ட நிதியத்திற்கு செலவுவைக்காமை சம்பந்தமான விடயத்தை உள்ளடக்கி தேசிய லொத்தர் சபையின் சட்ட விதிகள் | அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க சபையினால் நடாத்தப்படுகின்ற ஒவ்வொரு லொத்தர் சீட்டிழுப்புக்களிலும் வழங்கப்படுகின்ற பரிசில்களில் 06 |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம்பிரிவுகள் | அரசுடமையாக்க வேண்டியதுடன் அப்பரிசுப் பெறுமதியை திரண்ட நிதியத்திற்குச் செலவு வைத்தல் வேண்டும். எனினும் 05 வகையான லொத்தர்களின் 06 மாதங்களை மிகைத்து உரிமை கோரப்படாத ரூபா 76,501,720 தொகையான இழக்கப்பட்ட விசேட பணப் பரிசு திரண்ட நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | வெளியிடப்பட்ட 2387/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2024 யூன் 06 ஆந் திகதி வெளியிடப்பட்டது. | மாதங்களுக்குள் தகமையுள்ள நபர்கள் முன்வராத அனைத்து பணப்பரிசில்களையும் அரசுடமையாக்கி திரண்ட நிதியத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 2019/08 ஆம் இலக்க அரசாங்க நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கை | 2019 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க கூட்டுத்தாபனங்கள் உள்ளடங்கலாக அரசாங்க நிறுவனங்கள் www.promise.lk இணைய தளத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் அரசாங்க பெறுகை நடைமுறையின் (E-GP) கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அந்த நடைமுறையின் கீழ் சபையின் எந்த பெறுகைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேசிய லொத்தர் சபை www.premise.lkஇணைய தளத்தின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ள இலத்திரனியல் அரசாங்க பெறுகை நடைமுறையின் (E-GP) கீழ் பதிவு செய்துள்ளதுடன் தற்பொழுது இலத்திரனியல் அரசாங்க பெறுகை நடைமுறையின் (E-GP) பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2025 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | எரிபொருள் படிகளுக்கு தகமை இல்லாத கீழ் மட்டத்திலுள்ள 21 முகாமையாளர்களுக்கு (JM I-I) 110 லீட்டர் வீதம் மாதாந்த எரிபொருள் படிகள், 22 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 35,000 வீதம் போக்குவரத்து படிகள், 15 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கு (MA 1 - 2) 25 லீற்றர் வீதம் மாதாந்த | தேசிய லொத்தர் சபையின் ஆளணியினரை முன்கொண்டு பேணுதல் மற்றும் அதன் விற்பனையை அடைந்து கொள்வதற்காக தற்பொழுது பின்பற்றப்படுகின்ற வெளிக்கள உத்தியோகத்தர்களின் போக்குவரத்து முறைமை தொடர்ந்தும் | தேசிய லொத்தர் சபைக்காக தனியான போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி முறைமையினை அங்கீகரிக்கும் வரை தற்பொழுது அதற்காக உள்ள அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | எரிபொருள் படி மற்றும் 05 உத்தியோகத்தர்களுக்குரூபா 6,000 வீதம் போக்குவரத்து படிகளைச் செலுத்துவதற்காக கணக்காண்டில் ரூபா 10,690,970 செலவு செய்யப்பட்டிருந்தது. | பின்பற்றப்படுகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். இப்போக்குவரத்து முறைமைக்கு அங்கீகாரத்தினை வழங்குமாறு நிதி அமைச்சு செயலாளரிடம் தற்பொழுது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் தேசிய லொத்தர் சபையின் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு எந்த வகையிலும் பொருத்தமற்ற 22/99 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தேசிய லொத்தர் சபையினைசெயற்படுத்த முடியாது என தயவாக தெரிவிக்கிறேன். | இணங்கி நடாத்தல் வேண்டும். |
| (உ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 2/2015 ஆம் இலக்க மற்றும் 2022 சனவரி 18 ஆந் திகதிய PED2/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் சபையின் முன்னாள் தலைவர் உள்ளடங்கலாக 19 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,873,664.33 பெறுமதியான 23 கையடக்க தொலைபேசிகளும் ரூபா 436,600 பெறுமதியான 06 ipad களும் வழங்கப்பட்டிருந்தன. முன்னாள் பணிப்பாளர் சபை அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 282,657 பெறுமதியான ஒரு ipad மற்றும் ஒரு Macbook இன்றுவரை | பல ஆண்டுகளாக மத்திய மட்டத்திலிருந்து மேல் மட்ட உத்தியோகத்தர்களுக்கு கடமை நடவடிக்கைகளுக்காக கையடக்க தொலைபேசிகள் சபையினால் கொள்வனவு செய்து வழங்கப்பட்டிருந்ததுடன் கொரோனா தொற்றுநோய் காலத்தில் அந்த தேவைப்பாடு அதிகரித்துச் செல்லல் இடம்பெற்றுள்ளது. அதற்கிணங்க மேற்கூறிய நடவடிக்கைகளை ஏதாவது ஒரு | சுற்றறிக்கை எற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுபபாட்டிற்கு கொண்டு வருவதனை முன்னிட்டு 2022 ஆம் ஆண்டின் போது அந்த முறைமைக்கான ஒரு திருத்தம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முன்னாள் செயற்பாட்டு பணிப்பாளர் சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவை - 2006 | | | | |
| | (i) | 3.6 ஆம்பிரிவு | தொடக்க ஒப்பந்தம் வழங்கிய திகதியிலிருந்து 06 மாதங்களை மிகைத்திருக்காத மேலதிக பொருள் தேவைப்பாட்டினை ஏற்கெனவே அறிந்துகொள்ளாத மற்றும் அடையாளங்கண்டு கொள்ளாத விசேட சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் அந்த ஒப்பந்தத்தின் நீடிப்பாக மீண்டும் கட்டளைகள் மேற்கொள்ளப்படலாம் என்ற போதிலும் சபையினால் 2019 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களின் போது லொத்தர்களை அச்சிடுவதற்காக உரிய பெறுகையின் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற நடைமுறைப்பிரச்சினைகள் மற்றும் பெறுகை நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களின் காரணமாக பெறுகை நடைமுறைகளை முடிவுறுத்துவதற்கு குறிப்பிடத்தக்க அளவிலான காலப்பகுதி எடுத்திருந்ததுடன் அக்காலப்பகுதிக்குள் சந்தைக்கு தடைகளின்றி தொடர்ச்சியாக லொத்தர்களை வழங்கும் குறிக்கோளில் பணிப்பாளர் | முன்னைய பெறுகைகளின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் ஒப்பந்த காலம் முடிவடைகையில் புதிய ஒரு வழங்குனரினை அதற்காக தெரிவுசெய்யக்கூடிய வகையில் பெறுகை நடவடிக்கைகளை சரியாக திட்டமிட்டு அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சபையின்அங்கீகாரத்தின் அடிப்படையில் அதுவரையும் லொத்தர்களை அச்சிட்ட அச்சக நிறுவனங்களுடன் காணப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கை காலத்தை நீடிப்புச் செய்வதற்கு அல்லது இடைக்கால பெறுகைகளை மேற்கொள்வதன் மூலம் லொத்தர்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 4.2.1(ஆ) மற்றும் (இ) பிரிவுகள் | ஆகக்குறைந்தது 03 ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டத்தினை தயாரித்து அங்கீகரித்துக்கொள்ள வேண்டிய போதிலும் 2019 இலிருந்து 2024 வரை சபையின் லொத்தர்களை அச்சிடுவது தொடர்பான பெறுகை செயற்பாடுகளை உள்ளடக்கிய விபரமான ஒரு பெறுகைத் திட்டம் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2025, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கான பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான விபரமான பெறுகைத் திட்டத்திற்காக 3883(14) ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்ததிரத்தின் கீழ் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் நிதி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (iii) | 4.4 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் ஒரு பெறுகையின் கீழ் மேற்கொள்ளக்கூடியதாக இருந்த ரூபா 22,974,600 பெறுமதியான 20,000 விற்பனை உதவியாளர் ரீ சேட்டுக்கள்,ரூபா 3,825,000 பெறுமதியான 3,000 விற்பனை முகவர் ரீ சேட்டுக்கள் மற்றும் ரூபா 1,386,750 பெறுமதியான 1,075 பதவியினர் ரீ சேட்டுக்கள் என்பவற்றை | மேற்கூறிய பெறுகைகள் இரண்டு ஆண்டுகள் தொடர்பாக 02 பெறுகைத் திட்டங்களின் கீழ் மற்றும் ஒன்றுக்கொன்று மாற்றமான 03 தொழில்நுட்ப விபரக் குறிப்புக்களின் கீழ் 03 காலப்பகுதிகளுக்காக 03 பெறுகைகளின் கீழ் | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொள்வனவு செய்வதற்காக தனித்தனியாக பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அமுல்ப்படுத்துதல் இடம்பெறறது என தெரிவிக்கிறேன். | |
| (எ) | 2023 சனவரி 30 ஆந் திகதிய 009/601/0199/23 ஆம் இலக்க அமைசசரவை பத்திரம் மற்றும் 2023 பெப்ரவரி 07 ஆந் திகதிய 009/601/199/123 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களின் வழக்கு நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற சட்டத்தரணிகளின் சேவையை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் சபைக்கு எதிராக ஒரு அச்சிடல் நிறுவனத்தினால் தொடுக்கப்பட்ட ஒரு வழக்கிற்காக தோன்றுவதற்காக 06 தனிப்பட்ட வழக்கறிஞர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5,314,650 செலவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்கிறேன். | உரிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சபையின் மீளாய்வாண்டிற்கான முழு வருமானம் ரூபா 37,983,206,760 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் ரூபா 32,014,201,280 ஆக இருந்ததனால் வருமானம் ரூபா 5,969,005,480 ஆல் அதாவது 18.64 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நடைமுறை ஆண்டின் போது விற்பனைக் கிரயம் ரூபா 4,284,008,555 ஆலும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி ரூபா 615,311,886 ஆலும் மற்றும் நிருவாகச் செலவுகள் ரூபா 71,254,399 ஆலும் அதிகரித்திருந்ததனால் மீளாய்வாண்டிற்கான வரிக்கு முன்னைய தேறிய இலாபம் ரூபா 1,693,267,855 ஆக இருந்ததுடன் அது சபையின் முழு வருமானத்தில் 4.45 சதவீத குறைந்த பெறுமதியாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான மற்றும் 2023 ஆம் ஆண்டிற்கான விற்பனைகள், சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் செலவுகள், நிருவாகச் செலவுகள், நிதி மற்றும் ஏனைய செலவுகள் ஆகிய தொகுதிக்ளுக்குரிய செலவுகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விபரம் | ஆண்டு | | வித்தியாசம் | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| | 2024 (ரூபா) | 2023 (ரூபா) | (ரூபா) | சதவீதமாக |
| விற்பனைகள், சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் செலவுகள் | 1,158,486,156 | 1,408,116,521 | 249,630,365 | 17.73% |
| நிருவாகச் செலவுகள் | 1,128,174,614 | 1,056,920,215 | 71,254,399 | 6.74% |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான விற்பனைகள், சந்தைப்படுத்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் செலவுகள், 17.73 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் நிருவாகச் செலவுகள் 6.74 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் இலாபத் தன்மை மற்றும் தொழிற்படு மூலதன விகிதம் தொடர்பான பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| | விகிதம் | ஆண்டு | | |
|---|---|---|---|---|
| | | 2024 | 2023 | % |
| (i) | மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 8.01 | 6.3 | 1.71 |
| (ii) | தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 3.96 | 2.03 | 1.93 |
| (iii) | நடைமுறை சொத்துக்கள் விகிதம் (முறைகளின் எண்ணிக்கை) | 2.38:1 | 2.44:1 | -0.06 |
| (iv) | விரைவுச் சொத்துக்கள் விகிதம் (முறைகளின் எண்ணிக்கை) | 2.37:1 | 2.42:1 | -0.05 |

சபையின் நடைமுறை ஆண்டிற்கான மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதங்கள் முறையே 8.01 சதவீதம் மற்றும் 3.96சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அந்த விகிதங்கள் முறையே 6.3 சதவீதம் 2.03 சதவீதம் ஆகும். அதற்கிணங்க நடைமுறை ஆண்டின் போது மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 1.71 சதவீதத்தால் மற்றும் 1.93 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நிறுவன வளங்களின் முகாமைத்துவ செயற்பாட்டு முறைமையினை (ERPSystem) ஸ்தாபிக்கும் தொடக்க விழாவின் செலவுகளாக ஹோட்டல் வளவுக்காக மற்றும் உணவு செலவுகளாக ரூபா 361,550 செலவு செய்யப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு இணங்க மேற்கூறிய தொடக்க விழாவின் வேலைகள் ரூபா 361,550 கிரயத்திற்கு கொழும்பு பிரதேசத்திலுள்ள அரசாங்கத்துடன் இணைந்த அரசாங்க ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் கீழ் செயற்படுகின்ற சமுத்திரா ஹோட்டல் வளவில் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிறுவனத்தின் நிதியை செலவு செய்யும் போது அரசாங்க நிதி முகாமைத்துவ சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளை தொடர்புபடுத்திக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரிக்கு அனுப்பிவைக்கின்ற பணம் சம்பந்தமாக வருமான வரிப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு சபையினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வங்கிப் பிணையை சமர்ப்பிக்க வேண்டி ஏற்படுவதனால் மீளாய்வாண்டின் போது ரூபா 2,968,549 வங்கிப் பிணைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது பிணைக் கட்டணமாக ரூபா 16,178,698 செலுத்தப்பட்டிருந்தது. லொத்தர் விற்பனை வருமானத்தில் திரண்ட நிதியத்திற்கு வழங்கப்படுகின்ற பங்களிப்பிற்காக வாய்ப்பளித்தல் சம்பந்தமாக இப்பிரச்சினை உருவாகியிருந்ததுடன் சபை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், நிதி அமைச்சு என்பவற்றிற்கிடையே ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்திருக்காததன் காரணமாக தேவையற்ற வங்கி கட்டண கிரயத்தினை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | 2017/2018 ஆம் ஆண்டுகளுக்கான வரி மேன்முறையீடு தற்பொழுது ஆணைக்குழுவின் மூலம் உரிய விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதன் தீர்ப்பினை வழங்குவதற்கு எடுக்கும் காலம் சம்பந்தமாக சபைக்கு எதுவும் வெளியிட முடியாது என தெரிவிக்கிறோம். மேற்கூறிய பிரச்சினை சம்பந்தமாக நிதி அமைச்சின் தலையீட்டினைப்பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் நிதி அமைச்சிற்கு பல சந்தர்ப்பங்களில் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது. | சபையினால் திரண்ட நிதியத்திற்கு வழங்கப்படுகின்ற பங்களிப்பினை வருமான வரி கணிப்பீட்டின் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் முறைமை சம்பந்தமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

### 3.2 அடையாளங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 05 வகை லொத்தர்களை அச்சிட:டுக் கொள்வதற்கு மேற்கொண்ட பெறுகையின் போது ஒப்பந்தத்தினை வழங்குவதற்காக 6½ மாதங்கள் தாமதித்ததன் காரணமாக ஏனைய அவசர பெறுகைகளின் மூலம் அச்சிட வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக அண்ணளவாகரூபா 48,567,542 தொகையான தவிர்க்க கூடியதாகவிருந்த மேலதிக கிரயத்தினை சபையினால் செலவு செய்ய வேண்டி இருந்தது. | இது சம்பந்தமாக தொடக்க புலனாய்வினை நடாத்தி அதன் அறிக்கை கிடைத்துள்ளது. அதற்கிணங்க எதிர்காலத்தில் இதற்காக விபரமான ஒரு பதிலினை அனுப்பிவைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலத்திற்குள் பெறுகை செயற்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | உடனடி (சுரண்டுதல்) டிக்கட்டுக்களை அச்சிடுவது தொடர்பான பெறுகையின் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு 06 மாதங்கள் தாமதித்ததன் காரணமாக ஏற்கனவே இருந்த வழங்குனர்களின் ஒப்பந்த காலத்தை நீடிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக அண்ணளவாக ரூபா 5,437,500 தொகையான தவிர்க்ககூடியதாக இருந்த மேலதிக கிரயத்தினை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவின் காரணமாக உருவாகிய இறக்குமதிகளை மட்டுப்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு நாணயத்தை அனுப்புவதிலுள்ள பிரச்சினையின் காரணமாக அச்சிடல் தொழிலுக்கு தாக்கமளித்த கடதாசி தட்டுப்பாடு மற்றும் ஏனைய அச்சிடல் மூலப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பெறுகையின் தகமைபெற்ற ஒரு அச்சிடல் வழங்குனரினை தெரிவுசெய்யும் வரை காணப்படுகின்ற அச்சிடல் வழங்குனரின் அச்சிடல் ஒப்பந்த உடன்படிக்கை காலத்தை 06 மாதங்களால் நீடித்தலானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் திட்டமிடப்பட்ட காலத்திற்குள் பெறுகைச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சரியாக முன்னறியப்பட்ட தரவுகளின் அடிப்படையில் லொத்தர்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் அச்சிட்ட டிக்கட்டுகளுக்கு மத்தியில் 20,241,950 டிக்கட்டுக்கள் முகவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் மிகுதியாக இருந்தது. அவ்வாறே 110,972,541 டிக்கட்டுக்கள் முகவர்களால் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. இவ்வாறு முறையாக முன்னறிதல் இன்றி நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அண்ணளவாக ரூபா 106,945,990 தொகையான தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்த அச்சிடல் கிரயம் மற்றும் போக்குவரத்து கிரயத்தினை சபை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு 2024 ஆம் ஆண்டில் 1,072,546,400 லொத்தர்கள் அச்சிடப்பட்டுள்ளது எனவும் அவற்றில் 20,241,950 டிக்கட்டுக்கள் களஞ்சியத்தில் மிகுதியாகக் காணப்பட்டது எனவும் 110,972,541 டிக்கட்டுக்கள் திருப்பி அனுப்பப்பட்டது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனினும் இத்தரவுகளின் சரியான தன்மையில் குறித்த சில நடைமுறை சிக்கல்கள் காணப்பட்டன. இவற்றினுள் அச்சிடப்படாத SMS லொத்தர்களுக்காக தரவு முறைமையிலலிருநது ஒதுக்கிவைக்கப்படுகின்ற லொத்தர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | மிகையாக லொத்தர்களை அச்சிடுவதனால் தேவையற்ற அச்சிடல் கிரயத்தினைப் போல தேவையற்ற போக்குவரத்து கிரயமும் செலவு செய்யப்படுவதனால் முடியுமான அளவில் தரவுகளின் அடிப்படையில் லொத்தர்களை அச்சிடுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2023 யூலை 06 ஆந் திகதியிலிருந்து அதுவரை ரூபா 20 இற்கு விற்பனை செய்யப்பட்ட லொத்தர்களின் விலை ரூபா 40 வரை 100 சதவீத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. லொத்தரின் விலையை அதிகரிப்பதற்கு முன்னர் அண்மைய ஆண்டில் விற்கப்பட்ட லொத்தர்களின் அளவு 1,298,009,942 ஆக இருந்ததுடன் விலையை அதிகரித்ததன் பின்னர் 2024 ஆம் ஆண்டில் விற்கப்பட்ட லொத்தர்களின் அளவு 821,763,940 ஆக இருந்ததன் பின்னர் விற்பனை | ஏனைய பாவனைப் பொருட்கள் மற்றும் சேவைகளுடன் ஒப்பிடும் போது லொத்தர் என்பது பாவனையாளருக்கு அத்தியவசியமான விடயமல்ல எனினும் லொத்தர் பாவனையாளர்களிடம் வெற்றி தொடர்பான எதிர்பார்ப்பினை முன்னிலைப்படுத்தி விற்பனைசெய்யப்படுகின்ற ஒரு பொருள் ஆனதுடன் எப்போதாவது அதனை பயன்படுத்துவதனை இழக்கச் செய்தல் மீது அப்பாவனையாளர்களுக்கு எந்த ஒரு பயன்பாடும் இழக்கப்படுதல் | சபையின் லொத்தர் விற்பனையை அதிரிக்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த லொத்தர்களின் அளவு 476,246,002 ஆல் அதாவது 37 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. | இடம்பெறுவதில்லை. அவ்வாறான நிலைமையில் லொத்தர் பாவனையாளர் லொத்தருக்காக தமது வருமானத்திலிருந்து ஒதுக்கீடு செய்கின்ற பணத்தின் அளவானது ஏனைய தேவைப்பாட்டினை அர்ப்பணிப்புச் செய்து செலவு செய்யும் வகையிலான பாவனையாளர் நடத்தையை எதிர்பார்க்க முடியாது. | |
| (ஆ) | வலயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் சிபாரிசின் அடிப்படையில் விற்பனை முகவர்களுக்கும் விற்பனை உதவியாளர்களுக்கும் இடம்பெறுகின்ற இடர்பாடுகளின் போது பிரதிபலனாக ரூபா 14,871,500 தொகை விற்பனை முகவர்களுக்கும் விற்பனை உதவியாளர்களுக்குதம் வழங்கப்பட்டிருந்தது. அப்பிரதி பலன்கள் கிடைக்கினிற விற்பனை உதவியாளர்களுடன் சபைக்கு நேரடிப்பிணைப்பு இல்லாமையும் அவர்கள் தொடர்பான தகவல்கள் ஆவணப்படுத்தாமையும்,லொத் தர்களை விற்பனை செய்வதற்காக போதியளவு தரகுப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையும்,இவ்வ ாறான கொடுப்பனவுக்காக அதிகாரச்சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்படாமையும் காரணமாக இத்திட்டம் சட்டரீதியற்றதாக அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது எனவும் பிரதிபலன்களை வழங்கும் போது ஒழுங்கீனங்கள் உருவாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. | 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2017 மார்ச் 31 ஆந் திகதி வரை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினூடாக அமுல்ப்படுத்தப்பட்ட நடைமுறையின் கீழ் வழங்கப்பட்ட பிரதிபலன் அளவினை விட அதிக கொடுப்பனவு காப்புறுதி கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்யவேண்டி ஏற்பட்டமையின் காரணமாக உரிய நடைமுறைக்குப் பதிலாக விற்பனை வலையமைப்பிற்கு நேரடி பிரதிபலன்களை வழங்கும் ஒரு நடைமுறையினை நிறுவனத்தினூடாக அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | விற்பனை முகவர்களின் மற்றும் விற்பனை உதவியாளர்களின் தவல்களை நாளதுவரையாகப் பேணுவதற்கும் பிரதிபலன் பகிடைக்க வேண்டிய தரப்பினர்களை சரியாக அடையாளங்காண்பத ற்கும் தேவையான கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்த வேண்டியதுடன் திட்டத்தினை சட்டரீதியாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையினால் எந்த சட்ட ஏற்பாடும் இன்றி 2024 ஆம் ஆண்டில் விற்பனை உதவியாளர்களின் 86 மரணங்களுக்காக ரூபா 9,700,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணத்தில் ரூபா 2,000,000 தொகை 09 நபர்களின் திடீர் மரணங்களுக்காகவும் ரூபா 7,700,000 தொகையானது 77 நபர்களின் இயற்கை மரணங்களுக்காகவும் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது. | விற்பனை உதவியாளர்களின் நலன்புரி செயற்பாடுகள் விற்பனை முகவர்களால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | பல்வேறு நோய்களுக்கு உள்ளாகியுள்ள பொது மக்களுக்கான சிகிச்சைகளுக்காக தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் லொத்தர் விற்பனை வருமானத்தில் 0.005 சதவீத அளவினை செலவுவைத்து தயார்படுத்தப்பட்ட அசரண சரண நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 17,689,632 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 16,041,132 அதாவது 90 சதவீதமானது அந்த நிதியத்தை உருவாக்கும் குறிக்கோளுக்கு முரணாக ஏனைய செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. | அசரண சரண நிதியத்திற்கு நிதியை வழங்குதல் லொத்தர்களை வெல்லுபவர்களின் விருப்பத்தின் அடிபபடையில் வழங்கப்படுகின்ற நன்கொடைகள் நிறுவனத்தின் ஆளணியினர்களால் ஊக்குவிப்பு படிகளிலிருந்து வழங்கப்படுகின்ற பங்களிப்புக்கள் (உதாரணமாக நீரோகா லொத்தர்) என்பவற்றின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிதியமானது 1998-10-08 ஆந் திகதிய 3551-2 ஆம் இலக்க பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டது. | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் இவ்வாறான நிதியம் பேணப்படாதிருத்தல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அனுராதபுரம் சுற்றுலா விடுதியில் ஒரு ஆண்டில் பயன்படுத்தக்கூடிய அறைகளின் எண்ணிக்கை 2555 ஆக இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது 338 அறைகளும் 2024 ஆம் ஆண்டின் சனவரியிலிருந்து | இதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட அனுராதபுரம் சுற்றுலா விடுதி தற்பொழுது முழுமையாக திருத்தம் செய்வதற்கு உட்படுத்த வேண்டிய நிலையில் காணப்படுகின்றது. இதன் காரணமாக | சுற்றுலா விடுதிகளின் குறைபாடுகளை சரிசெய்து முழுமையாகப் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை 254 அறைகளும் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மன்னார் சுற்றுலா விடுதியில் ஒரு ஆண்டில் பயன்படுத்தக்கூடிய அறைகளின் எண்ணிக்கை 1,825 ஆக இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது 101 அறைகளும் 2024 ஆம் ஆண்டின் சனவரியிலிருந்து ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை 70 அறைகளும் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. | அறைகளாகப் பிரித்தலினை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மன்னார் சுற்றுலா விடுதி உருவாக்கப்பட்டதானது சுற்றுலா பயணிகளின் வருகை மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற பிரதேசமாக இருப்பதனால் அந்த சுற்றுலா விடுதியின் அறைகளை ஒதுக்கீடு செய்தல் குறைவடைந்தமைக்கு பிரதான காரணமாக உள்ளது. | |
| (ஆ) | சபையின் வாகனங்களில் 05 ட்ரக் வாகனங்கள் 03 வேன்கள் 02 மோட்டார் சைக்கிள்கள் என்பன 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த வாகனங்கள் சபையின் வோக்சோல் காணியின் வாகன தரிப்பிடத்தின் திறந்த வெளியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்த வாகனங்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது திருத்தம் செய்தல் பொருளாதார ரீதியாக வினைத்திறனற்றதாயின் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | Mitsubishi Canter வகையை சேர்நத ட்ரக் வாகனத்தை திருத்தம் செய்வதற்காக பெறுகை நடவடிக்கையை பூர்த்திசெய்து திருத்தம் செய்வதற்கு உட்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 04 ட்ரக் வாகனங்கள், 03 வேன்கள் என்பவற்றை பெறுகை நடைமுறையை பின்பற்றி விற்பனை செய்வதற்கு ஆயத்தப்படுத்தப்படுகின்றது. இரண்டு மோட்டார் சைக்கிள்கள் உள்ளதுடன் அந்த இரண்டு மோட்டார சைக்கிள்களையும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. | சபைக்கு பொருளாதார ரீதியாக சாதகமான தீர்மானத்தினை எடுத்து துரிதமாக அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | லொத்தர் சீட்டிழுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு ஒரு கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட Fortune கணனி முறையைபராமரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை 2015 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக சபைக்கு திருப்பி அனுப்பப்படுகின்ற | இந்த முறைமையின் தொடக்க மூலக் குறியீடு தேசிய லொத்தர் சபையிடம் இல்லாததனால் சில குறைபாடுகளை இன்று வரையும் முழுமையாக சரிசெய்வதற்கு முடியாதுள்ளதுடன் இப்பிரச்சினை உருவாகும் சந்தர்ப்பங்களில் சபையின் தகவல் தொழில் நுட்ப பிரிவின் மூலம் தீர்வுகளை வழங்குதல் இடம் பெறுகின்றது. | பலவீனங்கள் அவதானிக்கப்படுகையில் முறைமையில் தேவையான அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | லொத்தர்களின் அளவு அதிகரிக்கையில் இந்த முறைமையின் செயற்திறன் பலவீனமடைதல் மற்றும் முறைமையின் மூலம் அச்சிடப்பட்டு திருப்பி அனுப்படுகின்ற இன்வொயிஸ்களில் தொடர்ச்சியாக தவறுகள் காணப்படுதல் இடம்பெற்றிருந்தும் அக்குறைபாடுகளை இன்று வரை சரிசெய்வதற்கு முடியாதிருந்தது. | | |

**3.5 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய லொத்தர் சபையின் விளம்பரங்களை பிரசித்தப்படுத்துவதற்காக 2024/2025 ஆண்டிற்காக பிரசித்தப்படுத்தல் முகவர நிறுவனங்களை தெரிவுசெய்தல் தொடர்ரான பெறுகை நடவடிக்கையானது இந்த அறிக்கை வழங்கப்படும் திகதி வரை முடிவடைந்திருக்கவில்லை. | 2023/2024 விளம்பரங்களை பிரசித்தப்படுத்தும் முகவர் நிறுவனங்களைத் தெரிவுசெய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கு இணங்க இறுதிக் கட்டத்தில் விளம்பரங்களை பிரசித்தப்படுத்தும் 03 முகவர் நிறுவனங்களை தெரிவு செய்தலினை மேற்கொண்டு அந்த பரிந்துரை திணைக்கள பெறுகைக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அப்பரிந்துரைக்காக திணைக்கள பெறுகைக் குழுவின் அறிவுறுத்தலானது மேற்கொள்ளப்பட்டுள்ள பெறுகை வழங்குனர்களை பதிவுசெய்தல் செயற்பாட்டிற்கு சமமானதாகும். இதனால் அது பெறுகை அல்ல எனவும் அடிப்டை தகமைகளைப் பெற்றுள்ள (முன்னரே தகமைகளைப் பெற்றுள்ள) விளம்பரங்களை பிரசித்தப்படுத்தும் 06 முகவர் நிறுவனங்களையும் உள்ளடக்கிய | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் ரோகவையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பெறுகைச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குனர்களைத் தெரிவுசெய்து விளம்பரங்களை பிரசித்தப்படுத்தும் நடவடிககையை மேற்கொள்வதற்காக விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன. | |
| (ஆ) | சபையின் அலுவலக இடத் தேவைப்பாடு 40,000 சதுரஅடிக்கும் சமமானதாக இருந்த போதிழலும் இலக்கம் 32 முதலிகே மாவத்தையில் தற்போதைய அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் அளவு 28,885 சதுர அடியாகும். இக்கட்டிடத்தினை 02 ஆண்டுகளுக்கு மாத்திரம் வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் தேவைப்பாட்டிற்குப் பொருத்தமான ஏனைய ஒரு கட்டிடத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான பெறுகை நடவடிக்கையை மேற்கொள்ளாது 2018 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் இரண்டு ஆண்டுகளாக குத்தகை உடன்படிக்கையின் காலத்தை நீடித்து இக்கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு ஒரு கட்டிடத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக பெறுகைச் செயற்பாடுகள் அல்லது நேரடியாக கொள்வனவு செய்யும் நடைமுறைகள் சில தொடர்ச்சியாக அமுல்ப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நடைமுறை நிலைமையின் கீழ் இக்கட்டிடத்தினை அலுவலக செயற்பாடுகளுக்காக ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு அவ்வப்போது குத்தகை உடன்படிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தினை பயன்படுத்தக்கூடிய காலத்தை உறுதியாக அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தற்கு இருந்த சிக்கலின் காரணமாக அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. எவ்வாறாயினும் சபையின் அலுவலக நடவடிக்கைகளுக்காக போதியளவு வசதிகள் மற்றும் இடப்பரப்பு உள்ள ஒரு கட்டிடத்தினை பெற்றுக்கொள்வதற்காக 2025 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சபையின் வணிக இடத்தினை அதிக அளவான வாடகையின் கீழ் செயற்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் 2024 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயல்முன்னேற்றமானது பௌதீக மற்றும் நிதிரீதியாக காலாண்டு அடிப்படையிலும், அரையாண்டு ரீதியாகவும், வருடாந்தமும் அளவீடு செய்து பார்க்கப்பட வேண்டிய போதிலும் அச்செய்றபாடுகளின் செயலாற்றலினை அளவீடு செய்து பார்ப்பதற்காக ஆண்டின் இறுதியில் செயல்முன்னேற்றம் தொடர்பான ஒரு அறிக்கை தயாரிக்கப்படவில்லை. | ஒவ்வொரு ஆண்டிற்காகவும் செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயல்முன்னேற்றத்தினை காலாண்டு ரீதியாகவும் வருடாந்தமும் தயாரித்து முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்துவதற்கும் வருடாந்த செயல்முன்னேற்ற மீளாய்வு அறிக்கையினை கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பிவைப்பதற்கும் குறித்துக் கொள்கிறேன். | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடுகளை காலரீதியாக மீளாய்வுசெய்து தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபை 2024 ஆம் ஆண்டிற்காகத் தயாரித்திருந்த பாதீடுசெய்யப்பட்ட தரவுகளை நிதிக்கூற்றுக்களிலுள்ள தரவுகளுடன் ஒப்பீடு செய்த போது வருமானக் கூற்றிலுள்ள 09 விடயங்களின் பெறுமதிக்கும் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்குமிடையே 06 சதவீதத்திலிருந்து 1,354சதவீதம் வரையான வீச்சுடைய வித்தியாசமும் நிதி நிலைமைக் கூற்றிலுள்ள 18 விடயங்களின் பெறுமதிக்கும் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்குமிடையே 12 சதவீதத்திலிருந்து 333 சதவீதம் வரையான வீச்சுடைய வித்தியாசம் அவதானிக்கப்பட்டதன் காரணமாக பாதீடானது ஆக்கபூர்வமான ஒரு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டினை மற்றும் உள்ளபடியான செலவுகளுக்கு அண்மித்தாக அல்லது பொருத்தமானதாக பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் திருத்தங்கள் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்கள் உருவாகுமாயின் அதன் போது பாதீட்டினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க குறித்துக்கொள்கிறேன். | பாதீட்டுத் தரவுகளை முடியுமான அளவில் தயாரித்து நிதிக்கட்டுப்பாட்டு உபகரணமாக பயன்படுத்துதல் வேணடும். |

## 4.3 ஏனைய விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்த ரூபா 500 மில்லியன் பெறுமதியான 112.5 பேச்சர்ஸ் அளவுள்ள கொழும்பு வொக்சேல் மாவத்தையில் அமைந்துள்ள காணியில் ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது அதன் நிர்மாணத் திட்டத்திற்காக ரூபா 27,003,862 செலவு செய்யப்பட்டு 07 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிரந்தரமான ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரத்தினைப் பெற்று மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் நிதி அமைச்சின் கட்டளைக்கு இணங்க மேற்கூறிய நிர்மாணத்தினை இடைநடுவில் நிறுத்த வேண்டி ஏற்பட்டது. சபைக்கு நிரந்தரமான ஒரு கட்டிடத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கையினை பொதுத் திறைசேரிக்கு சுமையில்லாத வகையில் மேற்கொள்வதனை முன்னிட்டு கட்டிடத்தினை நிர்மாணிக்கும் நிதிய கணக்கில் பணம் சேமிக்கப்பட்டு வந்திருந்த போதிலும் நிதி அமைச்சினால் அப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் சபையினால் கட்டிடத்தினை நிர்மாணிப்பது கைவிடப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான வொக் சேல் மாவத்தையில் அமைந்துள்ள காணியை ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு மற்றும் அக்காணியில் ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டின் போது நிர்மாணத் திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 27 மில்லியன் பணத்தை சிக்கனமற்ற ஒரு செலவு இல்லாத வகையில் உரிய கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடுதல் வேண்டும். |